செ.வெ.எண்:29 நாள்:11.02.2019

# பொதுமக்கள் குடிநீரை சிக்கனமாய் பயன்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேண்டுகோள்!

கரூர் மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் பருவக்கால வறட்சியினால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. ஆகவே, பொதுமக்கள் குடிநீரை தேவைக்குத் தகுந்தபடி சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. த. அன்பழகன், இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், கரூர் மாவட்டத்தில் பொதுமக்களின் குடிநீர் பிரச்சனை தொடர்பான புகார்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் குடிநீர் விநியோகம் தொடர்பான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்பாட்டில் இருந்து வருகிறது. பொதுமக்கள் தங்களது குடிநீர் பிரச்சினைகள் தொடர்பான புகார்களை மேற்படி கட்டுப்பாட்டு அறையின் இலவச கட்டணமில்லா தொலைபேசி எண்.**1800 425 5104** வாயிலாகவும் மற்றும் **04324–255104** என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டும் தெரிவிக்கலாம்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.